செல்வதைப் பல சாட்சிகள் கண்டுள்ளனர். இரயில் வண்டியில் இப்பெண் அடிபட்டதற்கான அறிகுறிகள் பிரேதப் பரிசோதனையில் காணப்பட்டுள்ளன. இது விபத்து காரணமாக ஏற்பட்டதா அல்லது தற்கொலையா அல்லது வன்முறையினால் நடைபெற்ற மரணமா என்பது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

டி.டி. மருத்துவக் கல்லூரி மாணவர்களை இதர அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் சேர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடுகள்)*

முற்பகல் 11–50

4. பேரவைமுன் வைக்கப்பட்ட அறிக்கைமீது விவாதம் கோருதல்

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிக்குச் சென்றுவிட்டேன். (குறுக்கீடு) என் அனுமதியில்லாமல் திடீரென்று நீங்கள்* raise *பண்ண முடியாது. (குறுக்கீடு) அறிக்கை மேசையில் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) விதிகளின்படி நீங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) நோட்டீஸ் கொடுக்காமல் திடீரென்று எழுந்து கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது, நான் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்குப்*